மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை, ஐயா.

(இ) வினாவிற்கு இடமில்லை.

(உ) இதற்கு குறிப்பிடத் தக்க காரணம் கூறுவதற்கு ஒன்றும் இல்லை.

Cases filed before the Commissioner of Hindu Religious and Charitable Endowments (Administration) Department.

* 59. *Q.*—THIRUVALARGAL S. VELLAPANDIAN AND V. ISVARMURTI : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) the number of cases filed before the Commissioner of Hindu Religious and Charitable Endowments (Administration) Department during the years 1965, 1966, 1967, 1968, 1969, 1970, 1971 and 1972 ; and

(*b*) the stage at which the matter now stands ?

இந்து சமய அறக்கட்டளைகள் (நிர்வாகத்) துறை ஆணையாளர் முன் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள்

திரு. எஸ். வெள்ளபாண்டியன் & திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இந்து சமய அறக்கட்டளைகள் (நிர்வாகத்) துறை ஆணையாளர் முன் 1965 முதல் 1972 வரை எத்தனை வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன ?

(இ) இவ்வழக்குகள் தற்போது எந்நிலையிலுள்ளன ?

விடை

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) & (இ) ஒரு விவர அறிக்கை@ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

Renovation of Thiruvathigai Temple.

* 60 *Q.*—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) the date on which the renovation of Thiruvathigai Temple commenced ; and

(*b*) the date on which it would be completed ?

@ 229–230 ஆம் பக்கத்தில் இணைப்புV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1973 நவம்பர் 22]

திருவதிகைத் திருக்கோயில் திருப்பணி

திரு. சி. வி. ராஜகோபால் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருவதிகைத் திருக்கோயில் திருப்பணி எப்போது தொடங்கப் பெற்றது?

(இ) அது எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) திருவதிகைத் திருக்கோயில் திருப்பணி 1—12—1966-ல் தொடங்கப்பட்டது.

(இ) அத்திருப்பணி 1973 ஆம் ஆண்டு இறுதியில் முடியும் என எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. சா. கணேசன்: தலைவரவர்களே, திருவதிகைத் திருக்கோயில் இராஜ கோபுரத்தின் உள்வாயில், மகேந்திர பரமேஸ்வரவர்மனுடைய தொன்மையான கல்வெட்டு ஒன்று, ஒன்பதடி நீளம் இரண்டரை அடி அல்லது மூன்றடி அகல முள்ள பெரிய பலகை போன்றதொரு கல் வாயில்படியாகப் போடப்பட்டு இன்னமும் அப்படியே அது உபயோகப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. பல காலம் இந்தச் சபை மூலம் இதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றேன். இப்போது இந்தத் திருப்பணி செய்யும் நேரத்திலாவது இதை எடுத்து அதற்குரிய இடத்திற்கு அதை அனுப்புவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, அது பற்றிய விவரங்கள் தற்போது என்னிடம் இல்லை. ஆனால் இதுபற்றிப் பரிசீலித்து தேவையான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

MR. CHAIRMAN: Questions are over.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1973-74 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை, 1972-73 ஆம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கை ஆகியவற்றின் மீது விவாதம்—தொடர்ச்சி.

MR. CHAIRMAN: Now we resume discussion on the Electricity Board Budget.